# முகவுரை

**பகிர்ந்து கொள்ளக் கூடிய பெறுமதியானதொரு கதை**

செலான் வங்கி மீண்டும் ஸ்திரமான நிதி நிலைமைக்குத் திரும்பியது வரலாற்றுச் சாதனை மட்டுமன்றி ஏனைய நிதி நிறுவனங்களுக்கும் ஒரு எடுத்துக்காட்டு என்பதில் ஐயம் இல்லை.

2008 டிசம்பர் மாதத்தில் செலான் வங்கி முற்றிலும் எதிர்பாராத வகையில் சடுதியாக ஏற்பட்ட பொது மக்களின் நம்பிக்கை இழப்புக்கு முகம் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகியது. இலங்கையின் ஐந்தாவது பெரிய வங்கியான செலான் வங்கி உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட பொருளாதாரச் சரிவினால் முற்றாகச் செயலிழக்க வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாகியது..

இதன் விளைவாக ஏராளமான வாடிக்கையாளர்கள் எமது வங்கியில் இடப்பட்டிருந்த தமது வைப்புத் தொகைகளை அவசர அவசரமாக மீட்டுக் கொள்ள முனைந்தனர். மிகவும் துரதிஷ்டமான இந்த நிலைமையின் காரணமாக இருபது வருட தூய வரலாற்றையும் அபரிதமான செல்வாக்கையும் பெற்றிருந்த எமது வங்கியின் எதிர்காலம் கேள்விக்குறியானது.

இந்த பின்னடைவுக்கான காரணங்கள் மிகவும் சிக்கலானவை. அவற்றை பின்வரும் பக்கங்களில் தெளிவாக்க முயற்சி செய்கின்றோம்.

மிகவும் ஆபத்தான சரிவை நோக்கிச் சென்று கொண்டிருந்த நாம் இலங்கை அரசினதோமத்தியில் தேசத்தின் மத்திய வங்கியயினதோ பிணையின்றி எமது முதலீட்டாளர்களினதும் வாடிக்கையாளர்களினதும் தற்காலிகமாக இழந்திருந்த நம்பிக்கையை மீண்டும் நிலை நிறுத்திக் கொண்டோம். வங்கிகளின் வரலாற்றில் முன்னெப்போதும் நடந்திராத அரிய நிகழ்வு இது.

எமது நிகரற்ற இந்தக் கதையை தெளிவாகவும் நேர்மையாகவும் சொல்ல வேண்டுமென்பதே எமது இலக்கு. நாம் முகம் கொடுத்த சிக்கல்களின் போது பெற்றுக் கொண்ட அனுபவ அறிவின் மூலம் ஏற்கனவே குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைப் பெற்றுள்ளோம்.

அதே வேளை நாம் இக்கட்டில் இருந்த சமயம் எமது வங்கிக்குள்ளும் விசாலமான வெளிச்சந்தையிலும் முகம் கொடுத்த சில பிரச்சினைகள் இன்னும் முற்றாகத் தீர்க்கப்படவுள்ளன. அந்த சவால்களைச் சந்திப்பதற்கும் அவற்றுக்கான ஆக்கர்வ தீர்வுகளைப் பெற்றுக்கொள்ளவும் நாம் முனைந்து செயற்படுவோம்.

இக்கட்டான வேளையில் எமக்கு தனி நபர்களாலும் நிறுவனங்களாலும் அர்ப்பணிப்புடன் வழங்கப்பட்ட பேருதவிகள் மூலம் மிகக் குறுகிய காலப்பகுதியில் நாம் பெற்ற மீட்சியும் முன்னேற்றமும் ஏனையவர்களுக்கு ஒரு முன்னுதாரணமாக அமையும் என்பது எமது பணிவான நம்பிக்கையாகும்.

உறுதியானதும் உண்மையானதுமான சட்டகமொன்றுக்குள் எம்மை நிலை நிறுத்தி ஆரோக்கியமானதும் நிலைத்திருக்கக் கூடியதுமான வர்த்தகத்தை எதிர்காலத்துக்காக உருவாக்குவதற்கு எமக்கு கிடைத்துள்ள இந்த அரிய சந்தர்ப்பத்தை நாம் பெரிதும் வரவேற்கிறோம்.

**ஈஸ்ட்மன் நாரன்கொட**
*நிறைவேற்றுத் தலைவர்*

பெப்ரவரி 17, 2010

# பிரதம நிறைவேற்று அதிகாரியின் செய்தி

ஆக்கபூர்வமான வர்த்தக ஆய்வொன்று சிறந்த நடைமுறைகளையும் கற்றுக் கொண்ட பெறுமதி மிக்க பாடங்களைப் பற்றியும் தெளிவு படுத்துவதோடு மட்டும் நின்று விடாமல் விளைந்த பெறுபேறுகளையும் முன்வைக்கின்றது. செலான் வங்கியைப் பொறுத்தவரை அது புதிய பணிப்பாளர் சபையின் வழிகாட்டலில் மிகத் திருப்தியானதும் ஸ்திரமானதுமான பெறுபேறுகளை அடைந்துள்ளதைத் தெரிவிப்பதில் நான் பெருமகிழ்வடைகின்றேன்.

இலங்கை மத்திய வங்கி புதிய நிர்வாகத்தை நிர்மாணிக்கும் நடவடிக்கைகளை எடுத்தபின் வெளியாகும் முதல் நிதியாண்டின் அறிக்கை இதுவாகும் இதற்கு முந்திய பக்கங்களில் ஒரு ஆய்வறிக்கை மூலம் நாம் எடுத்த வழக்கத்துக்கு மாறான தொடர் முயற்சிகளைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளோம். தொடர்ந்து வரும் பக்கங்களில் அந்த ஆய்வறிக்கையை செலான் வங்கி இதுவரை பெற்ற வெற்றியின் அடையாளச் சின்னமாகவும் எமது எதிர்காலப் பாதையின் தெளிவான மைல் கற்களாகவும் நாம் தெளிவு படுத்தியுள்ளோம்.

2009 இல் வரிக்கு பின்னாலான வருமானம் 543.301 மில்லியன் ரூபாவாக இருந்தது. இது அதற்கு முந்திய நிதியாண்டை விட 250 சதவீத உயர்ச்சியைக் காட்டியுள்ளது. அதேவேளை வங்கியின் வருமானத்துக்கெதிரான செலவு விகிதம் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காட்டியுள்ளது. இது 75.79 விகிதத்தில் இருந்து 67.82 சதவிகிதமாகக் குறைந்துள்ளது.

2008 ம் ஆண்டின் மிகவும் அழுத்தம் நிறைந்த சிக்கலான வேளையில் எமது பேதுமான மூலதன விகிதம் 8.00 வீதத்தில் இருந்து 11.74 சதவிகிதமாக உயர்ந்தது. 2008ம் ஆண்டு இறுதிப்பகுதியில் உலகலாவிய ரீதியில் ஏற்பட்ட சடுதியான பொருளாதாரச் சரிவின் காரணமாக இலங்கையின் உள்நாட்டு பொருளாதாரத்தில் பாரிய பின்னடைவு ஏறபட்டது. இந்த எதிர்மறைத்தாக்கத்தின் காரணமாக சிலிங்கோ குழுமத்தில் செலான் வங்கியிடம் ஏனைய நிறுவனங்கள் பெற்ற கடன்களின் மீள் கொடுப்பனவு முற்றாகத் தடைப்பட்டதுடன் எமது குழுமத்தின் இணை அங்கத்துவ நிறுவனங்களும் அவ்வாறே பெருமளவு பாதிக்கப்பட்டன.

இயங்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்ட கடன்களில் ஏற்பட்ட உயர்ச்சியினால் எமது வங்கியின் இயக்கமுடியாத சொத்துக்களின் க்டன் விகிதம் 16.93% இருந்து 33.61% வரை கடந்த 12 மாதங்களில் உயர்வடைந்துள்ளது இது பற்றிய விபரங்கள் இந்த ஆண்டறிக்கையின் நிர்வாக அறிக்கையிலும் நிதிநிலைமை சுருக்கறிக்கைகளிலும் தெளிவுபடுத்தப்படுவதுடன் முதலீட்டாளார்களினதும் பங்குதாரர்களினதும் நம்பிக்கையை வென்றிட களம் அமைக்கப்பட்டுள்ளதையும் தெளிவு படுத்துக்கின்றது

செலான் வங்கியானது இலங்கை மத்திய வங்கி தன்மீது விதித்த திரவத்தன்மை இலக்குகளைக் கடந்து அல்லது அதற்கு அப்பாலும் முன்னேற்றம் கண்டுள்ளது. புதிய நிர்வாக சபை நிர்ணயிக்கப்பட்டபின்னர் எமது ஆக்கர்வமான திட்டங்களின் பிரகாரம். பங்குச்சந்தை விலைகள் தொடர்ச்சியான முன்னேற்றத்தைப் பெற்றுள்ளன.

சுருக்கமாகச் சொல்லப்போனால் இந்த ஆண்டறிக்கையின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சிக்கல்களையும் பின்னடைவுகளையும் தீர்த்துக்கொள்ள ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் தீர்மானங்களையும் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளதோடு அவற்றின் சாதக பாதகங்களையும் தெளிவுபடுத்தியுள்ளோம். அத்துடன் நிலைத்து நிற்கக்கூடிய முயற்சிகளையும் எல்லாக் கோணங்களிலும் ஆராய்ந்த பின்னர் சமூக, பொருளாதார, சுற்றாடல் அபிவிருத்தியின் மேம்பாட்டையும் கருத்தில் கொண்டு எமது எதிர்கால நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லவுள்ளோம்.

அத்துடன் முக்கிய கேந்திரங்களான தகவல் தொழில்நுட்பம் தொடக்கம் சந்தைப்படுத்தல் வரை சகல தொழில் துறைகளிலும் செலான் வங்கி தனது காலடியைப் பதிப்பதற்குத் தீர்மானித்துள்ளதெனவும் அதன் மூலம் ஆக்கர்பூவமானதொரு மாற்றத்தை உருவாக்க விரும்புவதையும் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன் இந்த நடவடிக்கைகள் மூலமாக செலான் வங்கியை இந்நாட்டின் முன்னணி வங்கியாக மீண்டும் நிலை நிறுத்த நாம் முனைந்து நிற்கின்றோம்.

கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக செலான் வங்கி “அன்புடன் அரவணைக்கும் வங்கி” என பெருமையுடன் தன்னை பறைசாற்றி வந்துள்ளது எனவே எமது எதிர்கால நடவடிக்கைகளையும் அதே தூய இதயத்துடன் முன்னெடுத்துச் செல்ல முனைந்து நிற்கின்றோம்.

கடந்த ஒரு வருட காலமாக வங்கி வரலாற்றில் நடைபெற்றிராத சவால்களுக்கு நாம் முகம் கொடுக்க வேண்டியிருந்த இக்கட்டான வேளையில் எமது நம்பிக்கைக்கும் அன்புக்கும் உட்பட்டிருந்த எமது வாடிக்கையாளர்களும் முதலீட்டாளர்களும் எம்மீது வைத்திருந்த அபரிதமான நம்பிக்கையையும் அபிமானத்தையும் அடிப்படையாக்கி மீண்டும் செலான் வங்கி தலை நிமிர்ந்து நிற்கும் காலம் வெகு தூரத்தில் இல்லையென்று திடமாக நம்புகிறோம்.

அதே வேளை எமது வங்கியின் முதலாவது கிளை திறக்கப்பட்டது முதல் இன்றுவரை நாம் எடுத்துக் கொண்ட அக்கறையும் பொறுப்புணர்வும் தொடந்தும் முன்னெடுக்கப்படுமெனவும் எம்மீது பல்லாயிரக்கணக்கான வாடிக்கையாளர்களும் முதலீட்டாளர்களும் வைத்துள்ள நம்பிக்கையும் அபிமானமும் வீண்போகாத வகையில் நடந்து கொள்வோம் எனவும் நான் உறுதியளிக்கின்றேன்

இறுதியாக செலான் வங்கி மீது பெரிதும் அபிமானமும் நம்பிக்கையும் வைத்துள்ள எமது வாடிக்கையாளர்களையும் முதலீட்டாளர்களையும் இந்த ஆண்டறிக்கை மூலம் சந்திக்க வாய்ப்பு கிடைத்ததையிட்டு பேருவகை கொள்வதுடன் இந்த வரப்பிரசாதம் எனக்கு பல்லாண்டு காலம் நிலைபெற வேண்டுமெனவும் பிரார்த்திக்கின்றேன்

**அஜித பெஸ்குவால்**
*பொதுமுகாமையாளர் பிரதம நிறைவேற்று அதிகாரி*

பெப்ரவரி 17, 2010